தமிழ் இலக்கிய நயம் (த) - தரம் 06
දෙමළ සාහිත්‍යය ඇගයීම (දෙ) - 6 ශ්‍රේණිය
SC06FL1T - 2026/346/30,000

# தமிழ் இலக்கிய நயம்

## தரம் 06



### தவணை 1

### செவிநுகர் கனிகள்

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

## தேசிய கீதம்

ஸ்ரீ லங்கா தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் ஸ்ரீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே


අධ්‍යාපන ප්‍රකාශන දෙපාර්තමේන්තුව විසින් සකස් කරන ලද වීඩියෝ ඊ තක්සලාව වෙබ් අඩවිය හා යූටියුබ් චැනලය මගින් නැරඹිය හැකිය.
கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால் ஆக்கப்பட்ட வீடியோக்களை e- Thaksalawa இன் இணையத்தளம் மற்றும் youtube அலைவரிசைகளினூடாகப் பார்வையிட முடியும்.
Videos produced by the Educational Publications Department can be viewed via the website and the YouTube channel of e – thaksalawa.

The National e-learning Portal for The General Education

https://www.e-thaksalawa.moe.gov.lk/

https://youtube.com/c/ethaksalawa-official

නැණස TV நெனச TV

https://moe.gov.lk/students/nenasa-tv/

අන්තර්ක්‍රියාකාරී පාඩම්, වීඩියෝ පාඩම්, ශ්‍රව්‍ය ඉගෙනුම් ආධාරක, ක්‍රියාකාරකම් පත්‍රිකා, මාර්ගගත ප්‍රශ්නාවලි, පෙළපොත, අධ්‍යාපනික විනෝදාත්මක වැඩසටහන්, මාර්ගගත පාඨමාලා ඇතුළු තවත් අධ්‍යාපනික වැඩසටහන් සඳහා පිවිසෙන්න.
ஊடாடும் பாடங்கள், வீடியோப் பாடங்கள், செவிப்புல கற்றல் உதவிகள், செயலட்டைகள், நிகழ்நிலை வினாக்கள், பாடநூல்கள், கல்விசார் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள், நிகழ்நிலை பாடநெறிகள் உட்பட மேலும் கல்விசார் நிகழ்ச்சிகளின் நிமித்தம் பிரவேசியுங்கள்.
Access for interactive lessons, video lessons, audio learning aids, activity sheets, online quizzes, textbooks, educational entertainment programs, online courses and more educational programs.

National Institute of Education
ChannelNIE

ජාතික අධ්‍යාපන ආයතනය
தேசிய கல்வி நிறுவகம்

වීඩියෝ වැඩසටහන්, පෙරහුරු ප්‍රශ්න පත්‍ර, ප්‍රායෝගික පරීක්ෂණ සහ සම්පත් පොත් යනාදී වටිනා අධ්‍යාපනික සම්පත් සඳහා පිවිසෙන්න
வீடியோ நிகழ்ச்சிகள், பயிற்சி வினாத்தாள்கள், செய்முறைச் சோதனைகள், வளநூல்கள் போன்ற பெறுமதியான கல்விவளங்களுக்காக பிரவேசியுங்கள்
Visit us for valuable educational resources; video programs, practice question papers, practical tests and resource books


நம் நாட்டு இளம் சந்ததியினரின் நலன் கருதி நம் அரசு உங்களுக்கு வழங்கும் இம்மொடியூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத்தக்க முறையிற் கவனமாக வைத்துப் படியுங்கள்.

பாடசாலையின் பெயர் :- ........................................................................................

| | மாணவர் பெயர் | தரம் | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 2026 | ........................................ | ............ | ........................................ |
| 2027 | ........................................ | ............ | ........................................ |
| 2028 | ........................................ | ............ | ........................................ |
| 2029 | ........................................ | ............ | ........................................ |

# தமிழ் இலக்கிய நயம்

## தரம் 6

## தவணை 1

## செவிநுகர் கனிகள்

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

தரம் 06

தவணை 1

செவிநுகர் கனிகள் (பாடலும் கதையும்)

முதற்பதிப்பு : 2025

© தேசிய கல்வி நிறுவகம்
அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

ISBN: 978-624-6792-28-2

தமிழ்மொழித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.ac.lk

*இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினால்,*
*இல 16/3 வனரதன வீதி, கல்கிசையில் அமைந்துள்ள அப்வ்வா*
*அச்சகத்தில் அச்சிடப்பட்டு; விநியோகிக்கப்பட்டது.*

Published by : National Institute of Education.
Printed by : Aptva, No.16/3, Wanarathana Road, Mount Lavinia.

## பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

இலங்கைப் பொதுக்கல்வியின் காத்திரமான மறுசீரமைப்பு முயற்சியானது கற்போர் ஒவ்வொருவரினதும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகத் தீர்க்கமான ஒரு பாதையை இலக்காகக் கொண்டுள்ளது. தேர்ச்சிகள் சார்ந்த கற்றல், பகுத்தறிவுச் சிந்தனை, ஆக்கத்திறன், 21ஆம் நூற்றாண்டுத் திறன்கள், தொழினுட்ப முனைப்பு, விழுமியப் பிரசைத்துவம் போன்ற பல துறைகளை வலியுறுத்தத்தக்க வகை யில் கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் முறைகள், கணிப்பீட்டு நடைமுறைகள் போன்றவற்றின் நவீனமயமாக்கம், இந்தக் கல்வி மறுசீரமைப்புச் செயன்முறையின் அடிப்படையாக அமைந்துள்ளது.கல்வியியலாளர்கள், பாடத்துறைச் சிறப்பறிஞர்கள், ஆசிரியர்கள் உட்படப் பல்வேறு தரப்பினர்களுட னான உடனுழைப்பு சார்ந்த உரையாடல்களின் ஊடாக, தேசிய கல்வி நிறுவகத்தின் மூலம் 2026 ஆம் ஆண்டில் தரம் 1இலும் தரம் 6இலும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்படும் கலைத்திட்டங்களி னதும் உரிய கற்கைச் சாதனங்களினதும் தரத்தை உறுதிப்படுத்துவதற்காக, விசேட கரிசனையுடன் செயற்பட்ட பிரதமர், கல்விச் செயலாளர், கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்கள், பாடப் பொறுப்பதிகாரிகள், பரீட்சை ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும், கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகமும் அவரது பணியணியினரும் போன்றோர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியது. மேலும், இப்பணியின்போது விசேட கரிசனையுடன் செயற்பட்ட, தேசிய கல்வி நிறுவகத்தின் தாபனப் பேரவை, கல்விசார் அலுவல்கள் சபை ஆகியவற்றின் அர்ப்பணிப்பை நன்றியுடனும் கௌரவத்துடனும் நினைவு கூருகின்றேன். இப்பணியின் வெற்றிக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட தேசிய கல்வி நிறு வகப் பணியணியினர் அனைவருக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

பேராசிரியர் மஞ்சுளா வித்தானபதிரண
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்.
2025.08.11

## கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகத்தின் செய்தி

தற்போதய உலகம் மிகவேகமாக முன்னேறி வருகின்றது. அதற்கேற்றவாறாகப், பாடசாலை மாணவர்களை நவீன உலகின் சவால்களை எதிர்கொள்ளத் தேவையான திறன்களுடன் தயார்படுத்துவது, கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள அனைவரினதும் தலையாய பொறுப்பாகும். அதற்கமைய, 2026 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கலைத்திட்டத்திற்கு அமைய மொடியூல் அடிப் படையிலான கற்றல் முறையை அறிமுகப்படுத்த வாய்ப்புக் கிடைத்தமை ஒரு சிறப்பான வெற்றியாகும் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறவேண்டும்.

ஒவ்வொரு பாடத்திற்கும் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்தக் கற்றல் சாதனங்கள், விமர்சன ரீதியான சிந்தனையைக் கூர்மைப்படுத்துவதன்மூலம் சிக்கலான பிரச்சினைகளுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைக் கண்டறிதல், பல்வேறு கோணங்களிலும் விடயங்களைப் பகுப்பாய்வுசெய்தல் மற்றும் தர்க்கரீதியாக முடிவுகளையெடுத்தல் போன்ற திறன்களை வலுப்படுத்தப் பெரிதும் உதவும் என்று நம்புகின்றேன்.

நற்குணமும் நல்லறிவும் நிறைவாய்ப்பெற்ற மாணவர் பரம்பரையின் நற்கனவுகளை நனவாக்க, இந்தக் கற்றல் சாதனங்களை ஓர் ஒளிவிளக்காகப் பயன்படுத்தும்படி உங்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன். மொடியூல் மற்றும் செயல்நூல்களையாக்கும் சிறப்பான பணிக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

டீ. ஏ. சுபாஷிணீ தெமட்டகொட
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்,
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
இசுருபாய, பத்தரமுல்லை.
2025.08.11

## முன்னுரை

எமது நாட்டின் புதிய கலைத்திட்டம், மாறிவரும் உலக மற்றும் நாட்டில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியமான திறன்களை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோல் காலத்திற்குக்காலம் மாறிவருகின்ற உலகிற்குப் பொருத்தமான திறன்களை வளர்த்து, நிலைபேண்தகு அபிவிருத்திக்கும் சவால்களை வெற்றி கொள்வதற்கும் நாட்டு மக்களிடம் காணக்கூடிய இயலுமையையும் மேற்கிழம்பச் செய்கின்றது. தற்போதைய கலைத்திட்டத்தில் புதுப்பித்தல்களையும் புதிய பாடங்களையும் அறிமுகப் படுத்துவதன் மூலம், கற்றல் - கற்பித்தல் செயல்முறையை நவீன காலத்திற்கு ஏற்றவாறு மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை இது அங்கீகரிக்கிறது. 2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரும் புதிய கலைத்திட்டத்திற்கு இணங்க, ஒவ்வொரு பாடத்திற்கும் கற்றல் அடிப்படையிலான மொடியூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்தவகையில் இப்புதிய கலைத்திட்டமானது, 2026ஆம் ஆண்டு தரம் 01, தரம் 06 2027ஆம் ஆண்டு தரம் 02, தரம் 07 2028ஆம் ஆண்டு தரம் 03, தரம் 08 2029ஆம் ஆண்டு தரம் 04, தரம் 09 2030 ஆம் ஆண்டு தரம் 05 ஆகிய ஆரம்ப மற்றும் கனிஷ்ட இடை நிலைப் பிரிவுகளுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந்த மொடியூல் மாணவர்களுக் கான புதிய கற்றல் முறைகளை உள்ளடக்கி உருவாக்கப்பட்டுள்ளதோடு இச்செயற் பாடுகளின் ஊடாக அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை ஆசிரியர் வழங்குவார். மேலும், இந்த மொடியூல்கள் சுய கற்றலுக்கு அவசியமான சூழலை உருவாக்குகின்றன. இவற்றின் ஊடாக மாணவர்கள் பாட உள்ளடக்கம் பற்றிய அறிவைப் பெறுவதோடு, பெற்ற அறிவைப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் பிரயோகிப்பார்கள் என நாங்கள் நம்புகிறோம். இக்கற்றற் சந்தர்ப்பங்கள் 21ஆம் நூற்றாண்டின் திறன்களான எழுத்தறிவு (Literacy) ஆளிடைத்தொடர்புத் திறன்கள், (Interpersonal skills) மற்றும் விழுமியங்கள் (Values) முதலியவற்றை வலுப்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

ஒவ்வொரு மொடியூலிலும் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களோடு, மாணவர்கள் தாங்கள் அடைந்த செயல்திறன் மற்றும் கல்வி இலக்குகளைச் சுயமாக மதிப்பிடுவதற்குத் தேவையான மதிப்பீட்டுக் கருவிகளும் வழங்கப் பட்டுள்ளன. புதிய திறன்களையும் அறிவையும் பிரயோகிப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம், யதார்த்தமான கற்றலுக்குத் தேவையான வழிகாட்டுதல்களை இம்மொடியூல்கள் வழங்குகின்றன.

இம்மொடியூல் அடிப்படையிலான கற்றல் முறையைத் தயாரிக்கும் முதன்மைப் பணிகளை மேற்கொண்ட, கல்வி அமைச்சின் முன்னாள் செயலாளர் பேராசிரியர் உபாலி சேதர, தேசிய கல்வி நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகங்களான பேராசிரியர் சுனில் ஜயந்த நவரத்தின, பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோரின் அர்ப்பணிப்பான முன்னெடுப்பினை நாங்கள் கௌரவமாக மதிக்கின்றோம். மேலும், இம் மொடியூல்களைத் தயாரிப்பதில் பங்களித்த பணிப்பாளர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய பணியணியினர் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பல்வேறு துறைசார்ந்தோரின் உயர்மட்ட சேவையினையும் நாம் மகிழ்ச்சியுடன் நினைவு கூர்கிறோம். இந்த மொடியூல்களைப் பயன்படுத்தும்போது நீங்கள் பெறும் அனுபவங்களும் ஆலோசனைகளும் எங்களுக்கு மிகவும் அவசியமானவை. எனவே, எதிர்கால மொடியூல் மேம்பாட்டிற்காக உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கலாநிதி எஸ்.ஏ.டி. சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை

**கண்காணிப்பும் மேற்பார்வையும்**

பேராசிரியர் மஞ்சுளா வித்தானபதிரண — பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

கலாநிதி தர்ஷன சமரவீர — பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்,
தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**வழிகாட்டல்**

கலாநிதி முருகு. தயாநிதி — பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**இணைப்பாக்கம்**

க. லோககீதா — விரிவுரையாளர்
தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

**பதிப்பாசிரியரர் குழு**

கலாநிதி க. இரகுபரன் — முதுநிலை விரிவுரையாளர்
மொழிகள்துறை,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

செ. சுந்தரலிங்கம் — பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தமிழ் மொழி அலகு, கல்வி அமைச்சு.

க. விஜிதா — பிரதிக் கல்வி வெளியீட்டு ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

சு. சேதுரத்தினம் — பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தேசிய பாடசாலைக் கிளை,
கல்வி அமைச்சு.

**எழுத்தாளர் குழு**

எஸ். உதயசந்திரன் — முன்னாள் பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை, தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

பா. சுமன் — விரிவுரையாளர்
தமிழ் கற்கைகள்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்.

சி. கேசவன் — விரிவுரையாளர்
சியன தேசிய கல்வியியற் கல்லூரி, வெயாங்கொட.

| | |
|---|---|
| ரதி அந்தோனிமுத்து | ஆசிரிய ஆலோசகர் சேவை<br>வலயக்கல்வி அலுவலகம், கண்டி. |
| திலீபா தனேந்திரன் | ஆசிரிய வளவாளர்<br>வலயக் கல்வி அலுவலகம், பிலியந்தலை. |
| த. யுவராஜன் | உதவிக் கல்விப் பணிப்பாளர் - தமிழ் (ஓய்வு)<br>மட்டக்களப்பு. |
| வை. நவதரன் | ஆசிரியர்,<br>மு/உடையார்கட்டு மகாவித்தியாலயம் |

**மொழிப்பதிப்பாசிரியர்**

| | |
|---|---|
| வ. மகேஸ்வரன் | வாழ்நாள் பேராசிரியர்<br>பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை. |

**சரவை நோக்கு**

| | |
|---|---|
| பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா | முதுநிலை விரிவுரையாளர்<br>தென்கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை. |

**சித்திரங்கள்**

| | |
|---|---|
| எஸ். பி. முரளி | ஆசிரியர் (ஓய்வு),<br>சரஸ்வதி மத்திய கல்லூரி, புஸல்லாவ. |

**பக்க வடிவமைப்பு**

| | |
|---|---|
| நா. பரமேஸ்வரி | வரைகலை வடிவமைப்பாளர்<br>தேசிய கல்வி நிறுவகம், மகரகம. |

**அட்டைபட வடிவமைப்பு**

| | |
|---|---|
| சி. றிச்சட் தமிழவன் | கணினி வடிவமைப்பாளர் |

# அறிமுகம்

தமிழ் இலக்கிய நயம் தெரிவுப் பாடமாக அமைகின்றது. தமிழ் இலக்கியக் கல்வி இரசனைக்கானது மட்டுமன்றி, சமூகத்தைப் புரிந்துகொள்ளவும் சவால்களுக்கு முகங் கொடுக்கவும் உதவும். அவ்வாறே புத்தாக்க விருத்திக்கும் ஆளுமைவிருத்திக்கும் உதவும். இவற்றை அடிப்படையாகக்கொண்டே இம்மொடியூல் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மொடியூல் ஆக்கத்திறனை மேம்படுத்தும் செயற்பாடுகளான கதை, பாடல், நாட்டார் கதை ஆகிய கற்றல் சந்தர்ப்பங்களைக் கொண்டுள்ளது.

இந்த மொடியூலைக் கற்பதன் ஊடாக மாணவர்கள் ஆக்கத்திறன் (Creativity), இணைந்து இயங்குதல் (Collaboration), தொடர்பாடல் (Communication), பகுத்து நோக்கும் சிந்தனை (Critical Thinking), தகவல்சார் எழுத்தறிவு (Information Literacy), தொடர்பூடக எழுத்தறிவு (Media Literacy), தொழினுட்பம்சார் எழுத்தறிவு (Technology literacy), தொடங்கும் ஆற்றல் (Initiative), தலைமைத்துவமேற்றல் திறன்கள் (Leadership Skills), சமூகத்திறன்கள் (Social Skills), நெகிழ்வுத்தன்மை (Flexibility), உற்பத்தித்திறன் (producitivity) ஆகிய 21ஆம் நூற்றாண்டுக்கான திறன்களை வளர்த்துக்கொள்ள முடியும்.

தரப்பட்டுள்ள மொடியூலில் அடங்கியுள்ள கற்றற் சந்தர்ப்பம் ஒவ்வொன்றும் அறிமுகம், முன்னறிவை நினைவுகூர்தல், செயற்பாடுகள், உதாரணங்கள், பயிற்சிகள், மேலும் கற்பதற்குரிய வலைத்தள முகவரிகள்/ இணைப்புகள், பாடப்பொழிப்பு, சுயகணிப்பீடு ஆகியவற்றைக் கொண்டுள்ளது. இந்த மொடியூலைப் பயன்படுத்தும் நீங்கள் பின்வருவன தொடர்பாகவும் கவனம் செலுத்தத் தவறாதீர்கள்:

- மொடியூலை எப்பொழுதும் சுத்தமாக வைத்துப் பயன்படுத்த முயற்சிசெய்யுங்கள்.
- தேவையின்றி மொடியூலில் குறிப்புகள் எழுதுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு செயற்பாட்டுக்கும் முன்னதாக உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்து விளங்கிக்கொள்ளுங்கள்.
- செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளில் உங்களது நண்பர்களுடன் ஒத்துழைத்துச் செயற்படுங்கள்.
- செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளிலும் விடைகளை மதிப்பீடு / கணிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களிலும் சுயமாகச் செயற்படுங்கள்.
- நீங்கள் பிரச்சினைகளை / இடர்களை எதிர்நோக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரிடம் வினாக்களை வினவி, மேலதிக அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- இணையத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் ஆசிரியரின் அறிவுறுத்தல்களின்படி செயற்படுங்கள்.

கலாநிதி முருகு.தயாநிதி
பணிப்பாளர்
தமிழ்மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

# செவிநுகர் கனிகள் என்ற மொடியூலின் ஊடாக மாணவர்கள் அடைந்துகொள்ளும் கற்றற்பேறுகள்

## கற்றற் சந்தர்ப்பம் 01

- இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாகக் கவிதையை / பாடலை இரசனையுடன் வாசித்து விளங்கி நயக்க வேண்டிய விடயங்களைச் சொந்த மொழிநடையில் கூறும்/ எழுதும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

  கவிதையை / பாடலை இரசிப்பதனூடாகப் படைப்பாக்கத்திறனை வளர்த்துக்கொள்ள முடியும்

## கற்றற் சந்தர்ப்பம் 02

- இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாகக் கவிதையை / பாடலை இரசனையுடன் வாசித்து பொருளறிந்து பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் ஆக்கச் செயற்பாடுகளிலே பயன்படுத்தமுடியும்.

## கற்றற் சந்தர்ப்பம் 03

- இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாகக் கவிதையின் பின்னணி, கவிதை நயம் என்பவற்றை அறிந்து, பெற்றுக் கொண்ட அறிவையும் அனுபவத்தையும் ஆக்கச் செயற்பாடுகளில் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

## கற்றற் சந்தர்ப்பம் 04

- இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாகக் கதை என்பது ஒரு மையக்கருவினை அல்லது நிகழ்ச்சியை விபரிக்கும் இலக்கிய வடிவம் என்பதை அறிந்துகொள்வதோடு கதைப் பின்னணியை அறிந்து, கதாபாத்திரச் சித்திரிப்பு, நயக்க வேண்டிய அம்சங்கள் என்பனவற்றைத் தெளிவுற முன்வைக்க முடியும்.

## கற்றற் சந்தர்ப்பம் 05

- இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக நாட்டார் கதையின் பின்னணி, பண்பாட்டம்சங்கள், பாத்திர வார்ப்புகள், நயக்கும் திறன் என்பனவற்றை அறிந்து சமூக உணர்வு, இடமாற்றல் திறன் என்பவற்றை மேம்படுத்திக் கொள்ளமுடியும்.

# பொருளடக்கம்


| செவிநுகர் கனிகள் | பக்க இலக்கம் |
|---|---|
| 01. கட்டிக்கரும்புப் பூனை | 01 |
| 02. உள்ளம் குளிர்ந்திடுமே | 08 |
| 03. இனிய சொற்கள் | 14 |
| 04. துயரப் பகிர்வு | 20 |
| 05. அன்பின் விளைவு | 29 |

கற்றற் சந்தர்ப்பம் 1

# கட்டிக்கரும்புப் பூனை

**இரண்டு மணித்தியாலம்**

இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக, கவிதையை / பாடலை விளங்கி வாசித்து நயந்த விடயங்களைச் சொந்த மொழிநடையில் கூறும்/ எழுதும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ளவும் படைப்பாக்கத்திறனை வளர்த்துக்கொள்ளவும் முடியும்.



நினைவேட்டைப் புரட்டுவோம்

- நீங்கள் விரும்பிக் கேட்ட / படித்த கவிதைகளைக் கூறுங்கள்.
- அந்தக் கவிதை வெளிப்படுத்தும் பிரதான விடயம் எது என்பதைக் கூறுங்கள்.
- அந்தக் கவிதையை விரும்பியமைக்கான காரணங்கள் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள்.



## எங்கள் வீட்டுப் பூனை

சின்னச் சின்னப் பூனை
சிறந்த நல்ல பூனை
என்னைப் பார்த்துத் துள்ளும்
எங்கள் வீட்டுப் பூனை

வட்ட மான கண்கள்
வண்ண மான செவிகள்
கட்டை யான கால்கள்
காட்டும் நல்ல பூனை.



பாலைக் குடிக்கப் பார்க்கும்
பதுங்கி இருக்கும் பரணில்
வாலைப் பற்றி இழுத்தால்
வளைந்து கையைக் கடிக்கும்

நாயைப் பார்த்துச் சீறும்
நகத்தால் மரத்தைக் கீறும்
பாயப் பதுங்கி ஓடும்
பந்தை உருட்டி ஆடும்.

எலியைக் கிளியைப் பிடிக்கும்
ஏறி மரத்தில் நடிக்கும்
புலியைப் போல இருக்கும்
புள்ளிக் கோட்டுப் பூனை

உண்ணுஞ் சோறும் பாலும்
ஊட்டி வளர்த்த பூனை
கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை.

- வித்துவான் க.வேந்தனார் -

## படைப்பாளி அறிமுகம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | க.வேந்தனார் |
| பிறந்த இடம் | : | வேலணை, யாழ்ப்பாணம் |
| தொழில் | : | தமிழாசிரியர் |
| கவிதை நூல்கள் | : | குழந்தை மொழி, கவிதைப் பூம்பொழில் |

**கல்வி :** மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தியவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்துவான் பட்டம் பெற்றவர்.

### செயற்பாடு 1

இச்செயற்பாட்டிற்காக சகபாடியுடன் இணைந்துகொள்வோம்.

- எங்கள் வீட்டுப் பூனை என்னும் பாடலை இயற்றிய கவிஞர் வித்துவான் க.வேந்தனார் பற்றி உரையாடுவோம்.
- வித்துவான் க.வேந்தனாரைப் பற்றிய அறிமுகக் குறிப்பினை 30 - 40 சொற்களில் பந்தியாக எழுதுவோம்.

வித்துவான் க.வேந்தனார்

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

........................................................................................................

## செயற்பாடு 2

இச்செயற்பாட்டிற்காகக் குழுவாக ஒன்றிணைவோம்.

- இப்பாடலில், பொருள் விளங்கக் கடினமான சொற்களை/ சொற்றொடர்களை 'அ' பகுதியில் எழுதுவோம்.
- எழுதிய பின்னர் அகராதியின் துணையுடன் அவற்றுக்கான பொருளை 'ஆ' பகுதியில் எழுதுவோம்.
- எழுதியவற்றை வகுப்பில் முன்வைப்போம்.
- முன்வைத்த விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுவோம்.
- கலந்துரையாடலின் அடிப்படையில் வேண்டிய திருத்தங்களை மேற்கொள்வோம்.



| அ | ஆ |
| --- | --- |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |
| .................................... | .................................... |

## செயற்பாடு 3

இச்செயற்பாட்டில் தனித்தனியே ஈடுபடுவோம்.

- இப்பாடலில் உள்ள ஒத்த ஓசைச் சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.

| அ | ஆ |
|---|---|
| பாலை | வாலை |
| புலியை | |
| சீறும் | |
| பிடிக்கும் | |

- எங்கள் வீட்டுப் பூனை என்ற பாடலை மீண்டும் ஒரு தடவை வாசிப்போம்.

(i) இப்பாடலில் பூனையின் தோற்றம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

.............................................................................................................

.............................................................................................................

(ii) "கண்ணைப் போன்ற பூனை
கட்டிக் கரும்புப் பூனை" - பூனைமேல் உள்ள அன்பு இவ்வரிகளில் வெளிப்படும் விதத்தைக் குறிப்பிடுவோம்.

.............................................................................................................

.............................................................................................................

(iii) பாடலில் இடம்பெற்றுள்ள உவமைகளை இனங்கண்டு பின்வரும் அட்டவணையை நிரப்புவோம்.

| உவமானம் | உவமேயம் | உவமை உருபு | பொதுத்தன்மை |
|---|---|---|---|
| | | | |
| | | | |

## செயற்பாடு 4

இச்செயற்பாட்டினைத் தனித்தனியாக மேற்கொள்வோம்.

- இப்பாடலில் எம்மைக் கவர்ந்த பகுதிகள் இரண்டைக் குறிப்பிட்டு, அவற்றுக்கான காரணத்தை விளக்கி எழுதுவோம்.



| கவர்ந்த பகுதிகள் | காரணம் |
| --- | --- |
| ............................................................ | ............................................................ |

செயற்பாடு 5

இச்செயற்பாட்டினைத் தனித்தனியாக மேற்கொள்வோம்.

- இப்பாடலைப் படிக்கும்போது பூனை பற்றி எங்கள் மனதில் தோன்றும் எண்ணங்களுள் மூன்றினைக் குறிப்பிடுவோம்.

○ ..........................................................................................

○ ..........................................................................................

○ ..........................................................................................

**மாணவர் சுய கணிப்பீடு**

**பொருத்தமான கட்டத்தில் ✓ அடையாளம் இடுவோம்.**

| இலக்கம் | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1 | படைப்பாளி பற்றிய அறிமுகத்தைச் சுருக்கமாகக் கூறமுடியும். | | | | |
| 2 | படைப்பாளி பற்றிய அறிமுகக் குறிப்புகளை எழுதமுடியும். | | | | |
| 3 | பாடலை இரசனையுடன் வாசிக்கமுடியும். | | | | |
| 4 | பாடல் பற்றிக் கலந்துரையாட முடியும். | | | | |
| 5 | பாடலில் நயந்தவற்றை விளக்கிக் கூறமுடியும். | | | | |
| 6 | நயந்தமைக்கான காரணத்தை எழுதமுடியும். | | | | |

கற்றற் சந்தர்ப்பம் 2

# உள்ளம் குளிர்ந்திடுமே

**இரண்டு மணித்தியாலம்**

இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக, கவிதையை / பாடலைப் பொருளறிந்து வாசித்து, இரசித்துப் பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் ஆக்கச் செயற்பாடுகளில் பயன்படுத்த முடியும்.



நினைவேட்டைப் புரட்டுவோம்

- நீங்கள் வாசித்து இரசித்த கவிதைகளை நினைவுபடுத்திக் கூறுங்கள்.
- அக்கவிதைகள் உங்கள் நினைவில் நிற்பதற்குரிய காரணங்கள் எவையெனக் கூறுங்கள்.
- உங்களுக்குத் தெரிந்த கவிஞர்களைக் கூறுவீர்களா?
- உங்கள் சகபாடி கூறும் கவிஞர்கள் பற்றி அறிந்துள்ளீர்களா?

## குழந்தைகள் நூல்நிலையம்



எங்களூர் மத்தியிலே - நல்ல
எழில்மிகு சோலையுண்டு
அங்கொரு கட்டடமாம் - அதன்
அழகினை என்ன சொல்வேன்?

சிறுவர் படிப்பதுபோல் - முன்னால்
சிலைகள் இரண்டிருக்கும்
'வருக, வணக்கம்' என்றே - அங்கே
மற்றோர் சிலை அழைக்கும்.



குழந்தைகள் நூல்நிலையம் - என்று
கொட்டை எழுத்தினிலே!
அழகுடன் ஓர் பலகை - நம்
ஆசையைத் தூண்டிவிடும்

உள்ளே புகுந்ததுமே - காண்போர்
உள்ளம் குளிர்ந்திடுமே!
பிள்ளைகள் அவ்விடத்தை - விட்டுப்
பிரியவும் சம்மதியார்.

வண்ணப் படங்களுடன் - பல
வகைவகைப் புத்தகங்கள்
கண்ணைக் கவர்ந்திடுமே! - நன்கு
களிப்பினில் ஆழ்த்திடுமே!

சிறுவர்க் குதவிடவே - என்றும்
சிரித்த முகத்துடனே
அருமை தெரிந்த நல்ல - ஓர்
அக்காவும் அங்கிருப்பாள்



விடுமுறை நாட்களிலே - சிறுவர்
வீட்டை மறந்திடுவார்
'குடுகுடு' என்று வந்தே - ஒன்றாய்க்
கூடிப் படித்திடுவார்.

பாட்டி கதைகளுடன் - இன்னும்
பற்பல நற்கதைகள்
நாட்டமாய்க் கூறிடுவார் - ஒருவர்
ஞாயிறு மாலையிலே. - அழ.வள்ளியப்பா

## படைப்பாளி அறிமுகம்

பெயர் : அழ. வள்ளியப்பா (1922 - 1989)

பிறந்த இடம் : இராயவரம், புதுக்கோட்டை மாவட்டம், தென்னிந்தியா.

படைப்புகள் : சிறுவர்களுக்கான பல இலக்கியப் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.



- மலரும் உள்ளம்
- பாட்டிலே காந்தி கதை
- பாப்பாவுக்குப் பாட்டு
- சின்னஞ்சிறு வயதில்
- பிள்ளைப் பருவத்திலே

### செயற்பாடு 1

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- ‘குழந்தைகள் நூல்நிலையம்’ என்னும் கவிதையை இயற்றிய கவிஞர் அழ. வள்ளியப்பா அவர்களைப்பற்றிய அறிமுகக் குறிப்புகளை வாசிப்போம்.
- கவிஞர் அழ. வள்ளியப்பா பற்றிய அறிமுகக் குறிப்பினை 30-40 சொற்களில் பந்தியாக எழுதுவோம்.

கவிஞர் அழ. வள்ளியப்பா

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

## செயற்பாடு 2

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- இக்கவிதையில் உள்ள பொருள் விளங்கக் கடினமான சொற்கள்/ சொற்றொடர்களை அட்டவணையின் 'அ' பகுதியில் எழுதுவோம்.
- ஆசிரியரின் வழிகாட்டலுடன் அவற்றின் பொருளை 'ஆ' பகுதியில் எழுதுவோம்.



| அ<br>சொற்கள் / சொற்றொடர்கள் | ஆ<br>பொருள் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| .............................. | ........................................ |

## செயற்பாடு 3

இருவர் இருவராக இணைந்து செயற்படுவோம்.

- பின்வருவனவற்றைப் பிரித்தெழுதுவோம்.

1. எங்களூர் -
2. சோலையுண்டு -
3. சிறுவர்க்குதவிடவே -
4. அங்கிருப்பாள் -
5. வண்ணப்படம் -
6. பற்பல -

## செயற்பாடு 4

குழுவாகச் செயற்படுவோம்.

- இந்தப் பாடலில் எங்களைக் கவர்ந்த வரிகளை அட்டவணையின் 'அ' பகுதியில் எழுதுவோம்.
- அந்த வரிகள் எம்மைக் கவர்ந்தமைக்கான காரணங்களை 'ஆ' பகுதியில் எழுதுவோம்.



| அ<br>கவர்ந்த வரிகள் | ஆ<br>கவர்ந்தமைக்கான காரணங்கள் |
| --- | --- |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | ...................................... |
| ...................................... | |

## செயற்பாடு 5

குழுவாகச் செயற்படுவோம்.

- பாடலை மீண்டும் ஒரு தடவை நன்றாக வாசிப்போம்.
- பாடலில் எங்களைக் கவர்ந்த விடயங்களைக் குறித்துக்கொள்வோம்.
- பாடலில் எம்மைக் கவர்ந்த விடயங்களைத் தொகுத்து ஒரு பந்தி எழுதுவோம்.
- எழுதிய பந்தியினை வகுப்பறையில் முன்வைத்துக் கலந்துரையாடுவோம்.

## செயற்பாடு 6

➢ நூல்நிலையத்தை ஒவ்வொருவரும் பயன்படுத்தி நன்மை பெற வேண்டும் என்பதையும் அதன் மூலம் ஒவ்வொருவரும் நற்பிரஜையாக விளங்கி நாட்டின் பெருமையை உலகறியச் செய்ய வேண்டும் என்பதையும் குழுவாக பின்வரும் முறைகளில் யாதேனும் ஒன்றின் ஊடாக முன்வைப்போம்:

- உரையாடல்
- கவிதை / பாடல்
- பேச்சு
- வலுகுவி அளிக்கை (Power point presentation)

**மாணவர் சுய கணிப்பீடு**

**பொருத்தமான கட்டத்தில் ✓ அடையாளம் இடுவோம்**

| இலக்கம் | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1 | படைப்பாளி பற்றிய அறிமுகத்தைச் சுருக்கமாகக் கூறமுடியும். | | | | |
| 2 | படைப்பாளி பற்றிய அறிமுகக் குறிப்புகளை எழுதமுடியும். | | | | |
| 3 | பாடலை இரசித்து வாசிக்கமுடியும். | | | | |
| 4 | பாடலிலுள்ள அரும்பதங்களுக்குரிய பொருள்களைக் கூறமுடியும். | | | | |
| 5 | பாடலின் பொருளைத் தெளிவாக முன்வைக்கமுடியும். | | | | |
| 6 | பாடலில் என்னைக் கவர்ந்த வரிகளையும் கவர்ந்தமைக்கான காரணங்களையும் எழுதமுடியும். | | | | |

கற்றற் சந்தர்ப்பம் 3

# இனிய சொற்கள்

**இரண்டு மணித்தியாலம்**

இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக கவிதையின் பின்னணி, கவிதையின் நயம் என்பவற்றை அறிந்து, பெற்றுக்கொண்ட அறிவையும் அனுபவத்தையும் ஆக்கச் செயற்பாடுகளில் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.



## நினைவேட்டைப் புரட்டுவோம்

- இதற்கு முன்பு கற்ற பாடல்களை/ கவிதைகளைக் கூறுவீர்களா?
- இதுவரை நீங்கள் கவிதை / பாடல் எழுதியதுண்டா?
- ஆம் எனில், என்ன கருப்பொருளில் எழுதியுள்ளீர்கள்?
- நீங்கள் கவிதை / பாடல் ஒன்றை இயற்ற விரும்புவீர்களாயின் என்ன கருப்பொருளைத் தேர்ந்தெடுப்பீர்கள்?

## படைப்பாளி அறிமுகம்

பெயர் : து.உருத்திரமூர்த்தி (1927 - 1971)

புனைபெயர் : மஹாகவி

பிறந்த இடம் அளவெட்டி, யாழ்ப்பாணம்.

தொழில் : எழுதுவினைஞர், நிருவாக உத்தியோகத்தர், உதவி ஆணையாளர்.

படைப்புகள் : கவிதை : இவரது பெரும்பாலான கவிதைகள் ‘மஹாகவி கவிதைகள்’ என்னும் பெயரில் ஒரு தொகுதியாக வெளிவந்துள்ளன. அத்தொகுப்பிலுள்ள கவிதைகளில் ஒன்றே ‘சின்னக்குருவி பறக்கிறது’ என்னும் கவிதை.



நவீன காவியம் : வள்ளி, கல்லழகி, கண்மணியாள் காதை, தகனம், ஒரு சாதாரண மனிதனின் சரித்திரம்.

பா நாடகம் : புதியதொரு வீடு, கோடை


செயற்பாடு 1

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- சின்னக் குருவி பறக்கிறது என்னும் கவிதையை இயற்றிய கவிஞர் 'மஹாகவி' பற்றிய அறிமுகக் குறிப்புகளை வாசிப்போம்.
- அவர்பற்றிய மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வோம்.
- அவர்பற்றி 30-40 சொற்களில் ஒரு பந்தி எழுதுவோம்.

## சின்னக் குருவி பறக்கிறது

சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது.



வெய்யில் நன்றாய் எறிக்கிறது
வெளியிற் பயறு காய்கிறது
பையக் குருவி வருகிறது
பயற்றுப் பாயை அடைகிறது.

என்னைப் பார்த்துக் கதைக்கிறதே
ஏதோ கேள்வி கேட்கிறதே
இன்னும் நாங்கள் பழகாத
இனிய சொற்கள் சொல்கிறதே.



"பயறு வேண்டும்" என்கிறதோ?
"பசிக்கின் றதுபார்" என்கிறதோ?
"வயிறு சிறிய தானாலும்
வருத்தம் பெரிதே" என்கிறதோ?

பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ,
பத்துப் பயறு வீசுவதால்?
கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்
கொத்திக் கொத்தித் தின்கிறது.



பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது
பின்னால் திரும்பிப் பார்க்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
சின்னக் குருவி பறக்கிறது.

- ‘மஹாகவி’ (து.உருத்திரமூர்த்தி) -



## செயற்பாடு 2

குழுவாகச் செயற்படுவோம்.

- இக்கவிதையில் பொருள் விளங்கக் கடினமான சொற்களை/ சொற்றொடர்களைத் தனித்தனியே கீழே ‘அ’ பகுதியில் எழுதுவோம்.
- எழுதிய பின்னர் குழுவாகச் செயற்பட்டு, அவற்றின் பொருளை ‘ஆ’ பகுதியில் எழுதுவோம்.
- எழுதியவற்றை வகுப்பில் முன்வைப்போம்.



| அ<br>சொற்கள் / சொற்றொடர்கள் | ஆ<br>பொருள் |
|---|---|
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ |

## செயற்பாடு 3

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- பின்வருவனவற்றைப் பிரித்தெழுதுவோம்.

1. திண்ணைக்குந்து - ..........................................
2. பயற்றுப்பாய் - ..........................................
3. சிறியதானாலும் - ..........................................
4. பையக்குருவி - ..........................................

## செயற்பாடு 4

இருவர் இருவராக இணைந்து செயற்படுவோம்.

1. இக்கவிதையை அடிப்படையாகக் கொண்டு, பின்வருவனவற்றுக்கு நிகரான ஓசையுடைய சொல்லை எழுதுவோம்.

   சிறகு - ..........................................

   பயறு - ..........................................

   பஞ்சம் - ..........................................

   பத்து - ..........................................

2. இக்கவிதையில் வரும் குருவியைப்பற்றி மனதில் தோன்றும் எண்ணங்களுள் இரண்டினைக் குறிப்பிடுவோம்.

   ..........................................

   ..........................................

3. ‘பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ
பத்துப் பயறு வீசுவதால்?’

இவ்வரிகள் மூலம் வலியுறுத்தப்படும் விடயத்தை இனங்கண்டு கூறுவோம்.

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

4. ‘சிறகைக் காற்றில் உதைக்கிறது’- இத்தொடரில் வெளிப்படுத்தப்படும் செயற்பாட்டினை எழுதுவோம்.

.............................................................................................................

.............................................................................................................

## செயற்பாடு 5

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- சின்னக் குருவி பறக்கிறது என்னும் பாடலை நயந்து வாசிப்போம்.
- இப்பாடலில் நாம் நயந்த தொடர்கள் இரண்டையும் அவற்றை நயந்தமைக்கான காரணங்களையும் எழுதுவோம்.

| நயந்த தொடர்கள் | காரணம் |
|---|---|
| 1. ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |
| 2. ........................................................ | ........................................................ |
| ........................................................ | ........................................................ |

## செயற்பாடு 6

- இந்தக் கவிதை வலியுறுத்தும் விடயத்தைப் பின்வரும் முறைகளில் யாதேனும் ஒன்றினூடாகக் குழுவாக முன்வைப்போம்.

  - ✓ கதை
  - ✓ கவிதை / பாடல்
  - ✓ பேச்சு
  - ✓ வலுகுவி அளிக்கை

**மாணவர் சுய கணிப்பீடு**

**பொருத்தமான கட்டத்தில் ✓ அடையாளம் இடுவோம்.**

| இலக்கம் | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1 | படைப்பாளி பற்றிய அறிமுகத்தைக் கூறமுடியும். | | | | |
| 2 | பாடலை இரசனையோடு வாசிக்கமுடியும். | | | | |
| 3 | பாடலில் இடம்பெற்றுள்ள அரும்பதங்களின் பொருளை அறிந்து முன்வைக்கமுடியும். | | | | |
| 4 | பாடலிலுள்ள சொற்றொடர்களைப் பிரித்து எழுதமுடியும். | | | | |
| 5 | பாடலில் நயந்த தொடர்களையும் அவற்றை நயந்தமைக்கான காரணங்களையும் எழுதமுடியும். | | | | |
| 6 | கவிதையை அடிப்படையாகக் கொண்டு புத்தாக்கங்களை படைத்து முன்வைக்கமுடியும். | | | | |

கற்றற் சந்தர்ப்பம் 4

# துயரப் பகிர்வு

**இரண்டு மணித்தியாலம்**

இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக, கதையினை நயந்து வாசித்து, அதில் இடம்பெற்றுள்ள அரும்பதங்களையும் அவற்றின் பொருளையும் கதையில் வலியுறுத்தப்படும் கருத்துகளையும் கையாளப்பட்டுள்ள உத்திகளையும் அறிந்து, ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ள முடியும்.



## நினைவேட்டைப் புரட்டுவோம்

- கதை வாசித்த அனுபவம் உங்களுக்கு உண்டா?
- உண்டு எனின், நீங்கள் வாசித்த கதைகளை ஞாபகப்படுத்திக்கொள்ளுங்கள்.
- அவற்றுள் ஒரு கதையில் உங்களைக் கவர்ந்த கதாபாத்திரங்கள் பற்றிக் கூறுங்கள்.
- அவை உங்களைக் கவர்ந்தமைக்கான காரணங்களைக் கூறுங்கள்.

## படைப்பாளி அறிமுகம்

பெயர் : எம்.ஏ.பழனியப்பன்

பிறந்த இடம் தமிழ்நாடு

படைப்புகள் : - முத்தான பத்துக் கதைகள்
- எல்லா மனிதரும் ஒன்றே
- ஆசியாவின் பேரொளி
- வாலிப நெஞ்சங்களில் வாழும் அப்துல் கலாம்



## நேசக்கரம்

ஓர் ஊரில் விவசாயி ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கழுதை ஒன்றையும் குதிரை ஒன்றையும் வேளாவேளைக்குத் தீனி போட்டு வளர்த்து வந்தார்; அவை இரண்டையும் தன்வேலைகளுக்குப் பயன்படுத்தி வந்தார்.

உருவிலும் செயற்பாட்டிலும் கழுதையும் குதிரையும் வேறுபட்டன. குதிரையானது, கழுதையை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. குதிரையின் செயற்பாடுகளைக் கண்ட கழுதையும் தன் வெறுப்பைக் குதிரையின்மீது காட்ட ஆரம்பித்தது.

ஒரு நாள், கழுதையைப் பார்த்து ஒருவிதமாகக் கனைத்தது, குதிரை. குதிரையின் கனைப்பைக் கேட்ட கழுதைக்குக் கோபம் வந்தது.

குதிரையைப் பார்த்துப் பலமாகக் கத்தி, குதிரையின்மீது தனக்குள்ள வெறுப்பைக் காட்டியது.

“சுமைகளை மட்டுமே சுமக்கப் பிறந்ததுதான் கழுதை என்னும் பிறவி” என்பதே கழுதையைப்பற்றிய குதிரையின் மதிப்பீடாகும்.

பந்தயங்களில் ஓடிப் பணம் குவிக்கின்ற திறமை உள்ளது என்பதால் மட்டும் குதிரைக்கு இவ்வளவு திமிர் வரக்கூடாது என்று கழுதை எண்ணியது.

“உருவத்தில் சிறியதானாலும் பெரியதானாலும் ஒருவருக்கொருவர் நேசக் கரம் நீட்டி வாழ வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும்” என்று கழுதை ஒரு சமயம் புத்திமதியாகக் கூறியதைக் குதிரை துச்சமெனத் தள்ளியது.

இவ்வாறாகப் பல்வேறு விடயங்களில் கழுதைக்கும் குதிரைக்கும் இடையே பகைமை உணர்வு தோன்றிவிட்டது. இரண்டும் ஒன்றோடொன்று மோதிக் கொள்ளாத குறைதான்.

ஒரு நாள் அந்த விவசாயி கழுதையையும் குதிரையையும் ஓட்டிக்கொண்டு வெளியூருக்குப் பயணம் புறப்பட்டார். பயணத்தின்போது தேவைப்படும் பொருட்கள் அனைத்தையும் மூட்டைகளாகக் கட்டினார்.

பாதி மூட்டைகளைக் கழுதையின் முதுகில் ஏற்றினார். மீதி மூட்டைகளைக் குதிரையில் ஏற்றியபோது குதிரை அதனைச் சுமக்க மறுத்தது.

“மூட்டைகளைச் சுமப்பதற்கு ஏன் மறுக்கிறாய்?” என்று குதிரையைப் பார்த்துக் கேட்டார், விவசாயி.

“மூட்டை சுமப்பதற்காகவே பிறவி எடுத்திருக்கும் கழுதையின்மீது ஏற்றுங்கள்” என்று விவசாயிக்குக் கூறியது, குதிரை.

எப்படி எடுத்துச் சொல்லியும் மூட்டைகளைச் சுமக்க மறுத்துவிட்டது குதிரை. என்ன இருந்தாலும் இந்தக் குதிரைக்கு இவ்வளவு திமிர் வரக்கூடாது என்று விவசாயி உள்ளூரச் சொல்லிக்கொண்டார். அவருக்கும் குதிரையின்மீது வெறுப்புத் தோன்ற ஆரம்பித்தது.

இந்நிலையில் எஞ்சிய மூட்டைகள் அனைத்தையும் கழுதையின்மீது ஏற்றினார், விவசாயி. சுமக்க முடியாத அளவுக்குச் சுமைகளை ஏற்றியதால், கழுதை தள்ளாடியபடியே நடந்து சென்றது. குதிரையோ சுமைகள் எவையுமில்லாததால் கம்பீரமாக நடைபோட்டது.

முதுகு வலிக்கச் சுமைகளைச் சுமந்து சென்ற கழுதை, “குதிரையே எனக்கு மயக்கம் வருவதுபோல் இருக்கிறது. என்மீது கருணை காட்டி என் சுமையில் பாதியை எடுத்துக்கொள். உனக்குக் காலமெல்லாம் நன்றிக்கடன் பட்டிருப்பேன்” என்று அழாத குறையாகக் குதிரையிடம் கெஞ்சிக் கேட்டது.

“மயக்கம் வந்தால் செத்துத்தொலைய வேண்டியதுதானே?” என்று அலட்சியமாகச் சொன்னது, குதிரை.

குதிரையின் பேச்சு, கழுதைக்கு வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல இருந்தது. அது குதிரைக்கு இவ்வாறு சாபம் கொடுத்தது:

“குதிரையே, என் பாடு வேதனைதான். ஆனால், உனது ஆட்டமும் கம்பீரமும் ரொம்ப நாளைக்கு நீடிக்காது.”

இப்படியாகப் பயணம் செய்துகொண்டிருந்த நேரத்தில் கழுதை சுமைகளைச் சுமக்க முடியாமல் மயங்கி விழுந்து செத்துவிட்டது. அதனால் கழுதையின் மீதிருந்த சுமைகளையெல்லாம் எடுத்துக் குதிரையின் முதுகின்மீது ஏற்றினார், விவசாயி.

மேலும், செத்துப்போய்விட்ட கழுதையை அந்த இடத்திலேயே விட்டு விடுவதற்கு விவசாயிக்கு மனம் வரவில்லை. எனவே, கழுதையையும் தூக்கிக் குதிரையின் முதுகின்மீது வைத்தார். குதிரையின்மீது தானும் ஏறிக்கொண்டார்.

கழுதையின் மீதிருந்த சுமைகளில் பாதியை, தான் சுமந்து வந்திருந்தால் தனக்கு இந்த நிலை வந்திருக்காதே என்று குதிரை எண்ணி வருந்தத் தொடங்கியது. கழுதையின் சாபம் இவ்வளவு சீக்கிரம் பலிக்கும் என்று குதிரை எதிர்பார்க்கவில்லை.

அடுத்தவரை நேசிக்கத் தெரியாத, நேசிக்க விரும்பாத தனது கர்வத்துக்குக் கிடைத்த தண்டனைதான் இது என்பதைக் குதிரை புரிந்துகொண்டது. துன்பநிலையை நினைத்துத் தலையைத் தொங்கப் போட்ட வண்ணம் தள்ளாடியபடியே குதிரை சென்றது.

## செயற்பாடு 1

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- கதையைக் கருத்தூன்றி மௌனமாக வாசிப்போம்.
- கதையில் வரும் பின்வரும் சொற்களின் / சொற்றொடர்களின் பொருளை எழுதுவோம்.
- எழுதப்பட்ட பொருள் பொருத்தமானதா என்பதை ஆசிரியரின் உதவியுடன் சரிபார்த்துக்கொள்வோம்.

| சொற்கள் / சொற்றொடர்கள் | பொருள் |
|---|---|
| 1. வேளாவேளை | |
| 2. பகைமை உணர்வு | |
| 3. திமிர் | |
| 4. உள்ளூரச் சொல்லுதல் | |
| 5. தள்ளாடுதல் | |
| 6. கருணை காட்டுதல் | |
| 7. வேதனை | |
| 8. துச்சம் | |
| 9. சீக்கிரம் | |
| 10. அலட்சியம் | |

## செயற்பாடு 2

குழுவாகச் செயற்படுவோம்.

- கழுதை, குதிரை ஆகியவற்றினதும் விவசாயியினதும் பண்புகளைப் (ஆகக் குறைந்தது தலா மூன்றை) பட்டியற்படுத்தி முன்வைப்போம்.

| கழுதை | குதிரை | விவசாயி |
|---|---|---|
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |
| ........................................ | ........................................ | ........................................ |

## செயற்பாடு 3

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- இக்கதையில் எம்மைக் கவர்ந்த பாத்திரம் எது என்பதைக் கூறுவோம்.
- கவர்ந்தமைக்கான காரணங்களை எழுதுவோம்.

1. கவர்ந்த பாத்திரம்

   ..................................................................................................................................

2. காரணங்கள்

   ..................................................................................................................................

   ..................................................................................................................................

3. கதையைப் படித்தபின் மனதில் பதிந்த வாசகம் ஒன்றை எழுதுவோம்.

   ..................................................................................................................................

   ..................................................................................................................................

## செயற்பாடு 4

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- பின்வரும் வாக்கியத்தை வாசித்து, அதன் கீழே தரப்பட்டிருக்கும் செயற்பாட்டை மேற்கொள்வோம்.

“குதிரையின் பேச்சு, கழுதைக்கு வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் இருந்தது”

1. இந்த வாக்கியத்தில் காணப்படும் உவமைத்தொடரை இனங்கண்டு எழுதுவோம்.

..........................................................................................................

2. ‘அ’ பகுதியில் உள்ளவற்றிற்குப் பொருத்தமானதை ‘ஆ’ பகுதியில் இருந்து தெரிவுசெய்து தொடர்புபடுத்துவோம்.

| அ | ஆ |
|---|---|
| • போல | • உவமானம் |
| • வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது | • உவமை உருபு |
| • வேதனைக்கு மேல் வேதனை தரல் | • உவமேயம் |
| • ஏற்கனவே அதிக பாரத்தினால் வருந்தியிருக்கும் கழுதையை மேலும் வருத்துவதான குதிரையின் பேச்சு | • பொதுத்தன்மை |

3. மேற்கூறப்பட்ட உவமைத் தொடருக்குச் சமமான கருத்துடைய பிறிதொரு உவமைத் தொடர் பின்வருவனவற்றுள் எது என்பதைச் சுட்டிக் காட்டுவோம்.

அ. திருடனுக்குத் தேள் கொட்டியது போல

ஆ. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல

இ. அனலிடைப்பட்ட மெழுகு போல

## செயற்பாடு 5

குழுவாகச் செயற்படுவோம்.

- கதையை அடிப்படையாகக்கொண்டு பின்வரும் விடயங்களை எழுதுவோம்.
    1. வலியுறுத்தப்படும் நீதிக்கருத்து
    2. வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய பண்புகள்
    3. தவிர்க்க வேண்டிய பண்புகள்
- தொகுத்துப்பெற்ற விடயங்களை வகுப்பறையில் முன்வைப்போம்.
- ஏனைய குழுக்கள் முன்வைக்கும் கருத்துக்களையும் செவிமடுத்துக் கலந்துரையாடுவோம்.

## செயற்பாடு 6

குழுவாகச் செயற்படுவோம்.

- கதையில் கூறப்பட்டவற்றை அடிப்படையாகக்கொண்டு, ஒவ்வொருவரையும் மதித்து, ஒருவருக்கொருவர் உதவிசெய்து வாழவேண்டியதன் அவசியத்தை, பின்வரும் ஒரு முறையினூடாக முன்வைப்போம்.
    - ✓ உரையாடல்
    - ✓ பேச்சு
    - ✓ சுவரொட்டி
    - ✓ வலுகுவி அளிக்கை

## மாணவர் சுய கணிப்பீடு

**பொருத்தமான கட்டத்தில் ✓ அடையாளம் இடுவோம்.**

| இலக்கம் | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1 | என்னால் பொருள் விளங்குமாறு கதையினை மௌனமாக வாசிக்கமுடியும். | | | | |
| 2 | கதையில் இடம்பெற்றுள்ள பொருள்விளங்கக் கடினமான சொற்கள் / சொற்றொடர்களைக் குறித்துக் கொள்ளமுடியும். | | | | |
| 3 | அச்சொற்களின் பொருளை இனங்கண்டு எழுதமுடியும். | | | | |
| 4 | கதையில் இடம்பெற்றுள்ள உவமைத்தொடரை இனங்கண்டு விளக்க முடியும். | | | | |
| 5 | கதை வலியுறுத்தும் நீதிக்கருத்தை இனங்கண்டு முன்வைக்கமுடியும். | | | | |
| 6 | கதையில் நயந்த விடயங்களை முன்வைக்கமுடியும். | | | | |

கற்றற் சந்தர்ப்பம் 5

# அன்பின் விளைவு

இரண்டு மணித்தியாலம்

இக்கற்றற் சந்தர்ப்பத்தினூடாக நாட்டார் கதையின் பின்னணி, பாத்திரங்கள், நயக்கத்தக்க அம்சங்கள் என்பவற்றை அறிந்துகொள்வதன் மூலம், சமூக உணர்வோடு வாழ்க்கைத் திறன்களைப் பிரயோகிக்க முடியும்.




நினைவேட்டைப் புரட்டுவோம்

- நாட்டார் கதை என்றால் என்னவென்று கூறமுடியுமா?
- நாட்டார் கதையில் இடம்பெறும் மொழி இயல்புபற்றிக் கூற முடியுமா?

## அண்ணனும் தம்பியும்

ஒரு ஊரில விவசாயிகளான சகோதரர்கள் இருவர், ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள். ஒருமுறை அவர்களது வயலில் நெல் அறுவடையாகி, பொலி களத்தில கிடந்தது. மூட்டைகளாக்கிப் பங்கு போட்டதில சகோதரர்கள் ரெண்டுபேருக்கும் தலா இருபது மூட்டைகள் கிடைச்சது. மூட்டைகள எடுத்துக்கொண்டு போறதுக்குள்ள இருட்டிட்டு. அண்ணனும் தம்பியும் மூட்டைகளுக்குக் காவல் இருந்தாங்க.

தம்பிக்குப் பசிக்கத் தொடங்கிட்டு. தன் மூட்டைகளையும் அண்ணனிடம் பாத்துக்கொள்ளச் சொல்லிட்டு வீட்டுக்குப் போனான். தனித்தனியே கிடந்த நெல்லு மூட்டையளப் பாத்ததும் அண்ணன் பல விதமா யோசிச்சான்.



தம்பியோ சின்ன வயசுக்காரன். விவசாய அனுபவம் காணாதவன். அவன் மனைவியோ செலவாளி. இந்த இருபது மூட்டை நெல்லு அவனுக்கு ஒரு வருசத்துக்கும் போதாது. ஒருத்தருக்கும் - தம்பிக்குக் கூட - தெரியாமல் எனது அஞ்சு மூட்டைகள தம்பியின் மூட்டைகளோடு சேத்துவிடுவோம். இப்பிடி நினைச்சுக்கொண்டு தன் மூட்டைகளில அஞ்சு மூட்டைய தம்பியின் மூட்டைகளோடு போட்டுவிட்டான் அண்ணன்.

சாப்பிடப்போன தம்பி கொஞ்சநேரத்தில திரும்பி வந்தான். தம்பியைக் காவல் வைத்துவிட்டு, அண்ணன் சாப்பிடப் போனான்.

தனியாகக் காவல் காத்துக்கொண்டிருந்த தம்பியும் ஏதோ நினைச்சான். அண்ணனோ பிள்ளைகுட்டிக்காரன். பெரிய குடும்பஸ்தன். இருபது மூட்டை நெல் அவனுக்கு ஒரு வருசத்துக்குப் போதாதே. எங்கட வீட்டில ரெண்டு பேர்தானே. எனவே, மனைவிக்குத் தெரியாம - அண்ணனுக்குக்கூடத் தெரியாம - தன் மூட்டைகளில அஞ்சை அண்ணன் மூட்டைகளோட சேத்துவிடுவோம். இப்படிச் யோசிச்சுக்கொண்டு அண்ணன் வருவதற்குள் தன் மூட்டைகளில அஞ்சு மூட்டைகள அண்ணனின் மூட்டைகளோடு போட்டுவிட்டான் தம்பி.

அடுத்தநாள் காலையில அண்ணன் நெல்லு மூட்டைகள வண்டியிலேத்தி வீட்டில வைச்சிற்று யோசிச்சான். என்ன ஆச்சரியம்! சரியாக இருபது மூட்டைகளும் இருந்தன.

இருபதில அஞ்சு போனாப் பதினைஞ்சுதானே இருக்கவேணும். எப்பிடி எண்ணிக்க குறையாம இருக்கு? எண்டு, விசயம் புரியாம குழம்பிக்கொண்டிருந்தான், அண்ணன். அந்த நேரத்தில அவன் தம்பியும் தன் வீட்டில அதே மாதிரி விசயம் புரியாம குழம்பிக்கொண்டிருந்தான்.

## செயற்பாடு 1

குழுவாகச் செயற்படுவோம்.

- அண்ணனும் தம்பியும் என்னும் நாட்டார் கதையைக் கருத்தூன்றி வாசிப்போம்.

- இந்தக் கதையில் காணப்படும் நாட்டார் கதையின் பண்புகள் மூன்றினை எழுதுவோம்.

  ........................................................................................

  ........................................................................................

  ........................................................................................

- இக்கதையில் வலியுறுத்தப்படும் நீதிக்கருத்தை எழுதுவோம்.

  ........................................................................................

## செயற்பாடு 2

குழுவாகச் செயற்படுவோம்.

- இக்கதையில் இடம்பெற்றுள்ள பேச்சு வழக்குச் சொற்களைப் பட்டியற்படுத்தி, அவற்றை எழுத்து வழக்கில் எழுதுவோம்.

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |
| ............................................ | ............................................ |

## செயற்பாடு 3

இச்செயற்பாட்டினைத் தனித்தனியே மேற்கொள்வோம்.

- நாட்டார் கதையின் மையக்கருத்துத் தொடர்பாகக் கூறுவோம்.
- கதையில் இடம்பெற்றுள்ள, பாத்திரங்களின் பின்வரும் எண்ணங்கள் உங்களைக் கவர்ந்துள்ளனவா, இல்லையா என்பதைக்குறிப்பிடுவோம்.
- அந்தச் சந்தர்ப்பங்கள் எம்மைக் கவர்ந்திருந்தாலும் கவரவில்லையாயினும் அதற்கான காரணத்தைக் கூறுவோம்.

| சந்தர்ப்பங்கள் | ஆம் / இல்லை | காரணம் |
|---|---|---|
| 1. தம்பிக்குக் கூட - தெரியாமல் எனது அஞ்சு மூட்டைகள தம்பியின் மூட்டைகளோடு சேத்துவிடுவோம். | | |
| 2. மனைவிக்குத் தெரியாம - அண்ணனுக்குக்கூடத் தெரியாம - தன் மூட்டைகளில அஞ்சை அண்ணன் மூட்டைகளோட சேத்துவிடுவோம். | | |

- கதையில் நாம் நயந்த பகுதியையும் அதற்கான காரணத்தையும் சுருக்கமாக எழுதுவோம்.

| நயந்த பகுதி | காரணம் |
|---|---|
| ..................................................<br>..................................................<br>..................................................<br>.................................................. | ..........................................<br>..........................................<br>..........................................<br>..........................................<br>.......................................... |

## செயற்பாடு 4

குழுவாகச் செயற்படுவோம்.

- நற்பண்புகளை வளர்த்தல் அவசியம் என்பது பற்றிப் பின்வரும் வடிவங்களுள் ஏதாவது ஒன்றின் மூலமாக முன்வைத்துக் கலந்துரையாடுவோம்.
  - ✓ உரையாடல்
  - ✓ கவிதை / பாடல்
  - ✓ சுவரொட்டி
  - ✓ வலுகுவி அளிக்கை

## மாணவர் சுய கணிப்பீடு

### பொருத்தமான கட்டத்தில் ✓அடையாளம் இடுவோம்.

| இலக்கம் | செயலடைவு உறுதிப்பாடு | மிக நன்று | நன்று | சாதாரணம் | முன்னேற்றம் தேவை |
|---|---|---|---|---|---|
| 1 | நாட்டார்கதையினை இரசனையுடன் வாசிக்கமுடியும். | | | | |
| 2 | நாட்டார்கதையிலுள்ள பேச்சு வழக்குச் சொற்களைப் பட்டியற்படுத்தி, அவற்றை எழுத்து வழக்கில் எழுதமுடியும். | | | | |
| 3 | நாட்டார்கதை வலியுறுத்தும் நீதிக்கருத்தை இனங்கண்டு தெளிவாக முன்வைக்கமுடியும். | | | | |
| 4 | நாட்டார்கதையில் நயந்த அம்சங்களை காரணங்கூறி எடுத்துரைக்கமுடியும். | | | | |
| 5 | நாட்டார்கதையில் கூறப்பட்டுள்ள விடயங்களை சுவரொட்டி /உரையாடல் /கவிதை / பாடல் / வலுகுவி அளிக்கை மூலம் முன்வைக்கமுடியும். | | | | |